OS.No. 54/2015

Dated : 04.01.2023.

Time: 12.19 p.m. To 12.37 p.m.

P.W. - 2 (லக்ஷ்மணன்) சாட்சி சத்தியபிராமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி சார்பாக குறுக்குவிசாரணை செய்யப்பட்டார்.

குறுக்குவிசாரணை

1.வாதியின் நிலத்தின் அருகே எனக்கு வீடோ, நிலமோ இல்லை. என்னுடைய இடம் 2 கி.மீ தள்ளி வின்னனூரில் உள்ளது. வாதி காடு ஓட்டுவதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார். வாதியுடன் பிறந்தவர்கள் சீரங்காயி, அம்மணி, ஐய்யம்பெருமாள். சின்னம்மாள் என்பவரும் அவர் உடன் பிறந்தவர் என்றால் அதை பற்றி தெரியாது. சீரங்காயி மற்றும் சின்னம்மாள் தற்போது உயிருடன் உள்ளார் என்றால் சரிதான். சுமார் 15 ஏக்கர் நிலத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார். ஆனால் என் பிரமான வாக்குமூலத்தில் சொல்லவில்லை.

2. வாதி மற்றும் 1ம் பிரதிவாதின் தந்தை வழி பாட்டானார் பெயர் கோவிந்தன் என்றால் சரிதான். அந்த கோவிந்தனின் இரண்டு மகன்கள் பெருமாள், முத்துசாமி இருவரும் தனித்தனியாக வீடு கட்டி வசித்து வந்தார் என்றால் இல்லை, ஒன்றாக தான் இருந்தார்கள். அவர்கள் வாய்மொழியாக பாகம் பிரித்து தனித்தனியாக அனுபவித்து வந்தார்கள் என்றால் இல்லை, ஆனால் கொஞ்சம் தனித்தனியாக ஓட்டிவந்தார்கள். பெருமாள் மகன் துரைசாமி என்பவரும், வாதியின் தந்தை முத்துசாமி என்பவரும் வழக்கு சொத்து தனித்தனியாக அனுபவித்து வந்தார்கள் என்றால் அவ்வாறு இல்லை. தாவா சொத்து சம்மந்தமான பட்டா யார் யார் பெயரில் உள்ளது என்று நான் என் முதல் விசாரணையில் சொல்லவில்லை. கோவிந்தனும், ஐய்யம்பெருமாளும் தாவா சொத்துக்களை தனித்தனியாக அனுபவித்து வருகிறார்கள் என்றால் ஆளுக்கு கொஞ்சம் அனுபவித்து வருகிறார்கள். அவர்கள் இருவரும் தனித்தனியாக வீடு கட்டி வசித்து வருகிறார்கள் என்றால் இல்லை ஒன்றாகதான் வசித்து வருகிறார்கள்.

3. மெத்தை வீடும் உள்ளது அதில் ஒன்றாக வசித்து வருகிறார்கள். தனித்தனியாக வீடும் உள்ளது. மேற்படி மெத்தை வீட்டிற்கு துரைசாமி பெயரில் பட்டா இருக்குது என்றால் இருக்காலாம். மேற்படி வீட்டில் துரைசாமி மட்டும்தான் கட்டினார் என்றால் இல்லை, அனைவரும் சேர்ந்துதான் ஒன்றாக கட்டினார்கள். மேற்படி மெத்தை வீடு துரைசாமியின் தனிப்பட்ட வீடு என்றால் சரியல்ல. எல்லோரும் ஒன்றாக தான் இருக்கிறார்கள் என வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி வீட்டிற்கு மின் கட்டண

ரசீது, வீட்டு வரி ரசீது துரைசாமி பெயரில்தான் உள்ளது என்றால் அதை பற்றி தெரியாது. வாதி பெயரில் சொத்துக்கள் பெயரில் பட்டா உள்ளதா என்றால் இல்லை கூட்டாகதான் உள்ளது. துரைசாமி மனைவி பெயர் தனபாக்கியம் என்றால் சரிதான். அவர்கள் பெயரில் வழக்கு சொத்தின் பட்டா உள்ளது என்றால் இருக்கலாம்.

(பிரதிவாதி வழக்கறிஞர் கேட்டுக்கொண்டன் பெயரில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்பட்டது)

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டது."

**Sd/-K.Ananthan,**

**Subordinate Judge,**

**Attur.**